**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධිපරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය)100 මට්ටම- 2022**
**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி - புதிய பாடத்திட்டம்) தேர்ச்சி மட்டம் 100 –2024**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 100 Level– 2024**

**(GGYE 101 Human Geography )**
**மானிடப் புவியியல்**

மூன்று(03) மணித்தியாலங்கள்.
Time: Three (03) Hours.

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible handwriting.

**04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய ஏதாவது மூன்று வினாக்களைத் தெரிவு செய்க. உலகின் புற உருவப்படங்கள் இரண்டு வழங்கப்பட்டுள்ளன.**
Answer four (04) questions only. **First question is compulsory. Select three other questions. Two-outline map of the world is provided.**

இந்த வினாப்பத்திரத்தில் 08 வினாக்கள் உள்ளன.

There are eight (08) questions in this question paper.

---

01 **அ** **தரப்பட்டுள்ள உலகப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.** (10 புள்ளிகள்)

i) அதி உயர் பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட தென்னாசிய நாடு ஒன்று.
ii) கிழக்காசியாவில் 10 மில்லியன்களை விட அதிகமான மக்களைக் கொண்ட நகரம் ஒன்று.
iii) மத்திய தரைக்கடல் விவசாயத்தைத் மேற்கொள்ளும் நாடு ஒன்று.
iv) அதி உயர் மானிட அபிவிருத்திச்சுட்டியைக் (HDI) கொண்ட நாடு ஒன்று.
v) பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள புதிதாகக் கைத்தொழில் மயமான நாடு ஒன்று.
vi) 75 % அதிகமான நகர சனத்தொகையைக் கொண்ட நாடு ஒன்று.
vii) ஆபிரிக்காவில் நிலத்தால் சூழப்பட்ட நாடு ஒன்று.
viii) தென்னாசியாவில் வறுமையான நாடு ஒன்று
ix) ஒரு முன்னனி இடப்பெயர்வுத் தாழ்வாரம்
x) உலகின் மிகப் பெரிய நாடு.

**ஆ** **பின்வரும் எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.** (15 புள்ளிகள்)

i) இடவமைவு
ii) திசையும் தூரமும்
iii) மனித சூழல் தொடர்புகள்
iv) அளவும் அளவுத்திட்டமும்
v) பிரதேசத்தின் பண்புகள்

02 ‘மானிடப்புவியியலானது துறைகளுக்கிடையே தொடர்பு கொண்ட மற்றும் பல நோக்குடைய ஒரு கற்கைத் துறையாகும்’. இக்கூற்றினை ஆதாரங்களுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

03 i) மிகைகுடித்தொகை குறை குடித்தொகை ஆகியனவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

ii) ‘மிகைகுடித்தொகையானது பிரச்சினையல்ல. மிகைகுடித்தொகையானது வளங்களும் வளப்பயன்பாடும் பற்றிய பிரச்சினையாகும்’. இக்கூற்றினை கோட்பாட்டு ரீதியான மற்றும் அனுபவ ரீதியான உதாரணங்களை ஆதாரமாகக் கொண்டு விமர்சிக்க. (15 புள்ளிகள்)

04 i) உலகமயமாதல், என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொண்டதென்ன? (05 புள்ளிகள்)

ii) உலகின் பொருளாதார நிலத்தோற்றப்பாட்டில் உலகமயமாதலின் தாக்கத்தினை ஆராய்க. (20 புள்ளிகள்)

05 i) பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் நாடுகளுக்கிடையே நிலத்தை அடையாளப்படுத்த பயன்படுத்தப்படும் எல்லைகள் எவை எனக்குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii) பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் நாடுகளுக்கிடையே எல்லைப்பபிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடிய மூன்று நிலைமைகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

06 கிராம நகர இடைப்பெயர்விற்கு இட்டுச்செல்லும் இழுவிசை மற்றும் தள்ளு விசைக்காரணிகளை விவரிக்குக. பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் இவ்வகையான இடப்பெயர்வின் சமூக பொருளாதார சூழல் தாக்கங்களை மதிப்பீடு செய்க. (25 புள்ளிகள்)

07 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச வர்த்தகத்தினால் ஏற்படக்கூடிய நேர் மற்றும் எதிர் விளைவுகளை அடையாளப்படுத்தி விவரிக்குக. (25 புள்ளிகள்)

08 பின்வருவனவற்றுல் ஏதாவது இரண்டிற்கு விளக்கக்குறிப்பெழுதுக. (12.5 X 2 புள்ளிகள்)

i) சேவைத்துறையின் வளர்ந்து வரும் முக்கியத்துவம்

ii) சர்வதேச தொழிலாளர் இடப்பெயர்வு

iii) காலனித்துவம்.

iv) உலக ரீதியான தங்கியிருக்கும் தன்மை



Reg. No: ...............................................

Course Code: ......................................

Department of Geography

University of Peradeniya